# நிதித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 16

## 2014–2015

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2014

# பொருளடக்கம்


| தொடர் எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை | 1 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 5 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 23 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 48 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 55 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 61 |
| 7. | அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை | 68 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

# 2014–2015 ஆம் ஆண்டிற்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

## முகவுரை:

“ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏற்றமிகு தலைமையிலான இவ்வரசு, வருவாய் அளவை மதிப்பீடு செய்து, வசூலித்து, அவற்றை தமிழக மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திட ஒதுக்கீடு செய்து, எண்ணற்ற பல நல்வாழ்வுத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் உருவாக்கி அவற்றைச் செயல்படுத்திவருகிறது.

**2.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, **2011**ஆம் ஆண்டு மே திங்களில் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக, ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளது. **2014–2015**ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் புதிய திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இந்த அரசின் பல்வேறு சாதனைகளும் முனைப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டின் பொருளாதாரம், அனைத்து முக்கியத் துறைகளிலும் அதன் இலக்கினை எய்துவதற்காக, ரூபாய் பதினைந்து இலட்சம் கோடி மொத்த முதலீட்டு மதிப்பீட்டில், பல்வேறு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை தெரிவு செய்து, அவற்றை நிறைவேற்றுவதற்காக துறைசார்ந்த குறிப்பிட்ட உத்தி அணுகுமுறை தொடர்பாக, தமிழ்நாடு தொலைநோக்குத்திட்டம் **2023–**ன், இரண்டாம் தொகுதியை, **17.02.2014** அன்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். 2014–2015ஆம் நிதியாண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.2000 கோடி, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியானது, அரசு–தனியார் பங்கேற்புத் திட்டங்களுக்குத் தேவைப்படும் திட்ட சாத்தியக்கூறு உதவித் தொகை (Viability Gap Funding) உள்பட இத்திட்டங்களை செயல்படுத்த தேவைப்படும் நிதியை ஈடுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

4. தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகிக்கிற பொறுப்பு, நிதித்துறையைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆண்டும் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலக் கருவூலத்தை நிருவகித்து வரும் நிதித்துறை, வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பு வகிப்பதோடு, கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும்

வகிக்கிறது. நிதித்துறை, பல்வேறு துறைகளின் செயற்குறிப்புகளை, அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, தேவை, செலவுச்சிக்கனம், வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறை முதலியவற்றிற்கேற்ப கூர்ந்தாய்வு செய்து மதிப்பிடுகிறது.

5. நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

**6.** தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 “ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

**7.** கருவூலக் கணக்குத் துறை **01.04.1962**ஆம் நாளன்று உருவாக்கப்பட்டது. இத்துறை கருவூலக் கணக்கு இயக்குநர் அவர்களைத் துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கும் **6** மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், **7** சம்பளக் கணக்கு அலுவலகங்கள், **2** சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், **32** மாவட்டக் கருவூலங்கள், **1** ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், **1** முத்திரை தாள் வழங்கும் உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும்

229 சார் கருவூலங்கள் ஆகிய அலுவலகங்கள், கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## மின்–ஆளுமை முயற்சிகள்

### தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிப்பு முறை (ATBPS)

8. தற்போதைய கருவூலச் செயல்பாடுகளான மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்களின் அவ்வப்போதைய நிலையைக் கண்டறிதல் மற்றும் பட்டியல்கள் பரிசீலிக்கப்படுவதைக் கண்காணித்தல் போன்றவற்றில் உள்ள இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு தன்னியக்கக் கருவூல பட்டியல் ஏற்பளிப்புத் திட்டம், அனைத்து சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்ட கருவூலங்கள், சார் கருவூலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் சிறந்த கண்காணிப்புகளை மேற்கொள்ள வசதியளிப்பதோடு, பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், வங்கிகள், மாநில கணக்காயர் ஆகியவர்களுக்கு தங்கள் பணியை சிறப்பாக செய்ய வழிவகை செய்யும். இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, பணியாளர்களின் பணியிடச் சூழலை

மேம்படுத்துதல், கணினி மற்றும் ஏனைய சாதனங்கள் வழங்குதல், உள் மற்றும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்து கருவூலங்களிலும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**9.** கருவூலத்தின் வாயிலாக நடைபெறும் அரசின் வரவு மற்றும் செலவு தொடர்பான பணப் பரிமாற்றங்கள் மத்திய சேவைக் கணினியில் (Central Server) பதிவு செய்யப்படுவதோடு பல்வேறு மேலாண்மை தகவல் திட்ட அறிக்கைகளான, கருவூலத்தில் பெறப்படும் பட்டியல்களின் எண்ணிக்கை, மின்னணு தீர்வை முறை மற்றும் மின்னணு தீர்வையற்ற முறைகள் மூலமாக வழங்கப்படும் பட்டியல்களின் வகைகள், அதாவது சம்பளம், ஓய்வூதியம் போன்ற பட்டியல்கள் பெறப்படும் விவரங்கள், நிலுவையிலுள்ள பட்டியல்களின் எண்ணிக்கை, வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட பட்டியல்கள் ஆகியவற்றையும் இதன் மூலமாகப் பெற முடியும்.

## வலைத் தள பட்டியல் மென்பொருள் (Web Payroll)

**10.** வலைத் தள பட்டியல் மென்பொருள் 2013–14ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது கருவூலத் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் (சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள்) தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருமித்த தரவுத்தளம் (Centralised Employees' Database) ஏற்படுத்துவதன் மூலமாக, மேலாண்மைத் தகவல் முறையில் பணியாளர்களின் விவர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவர அறிக்கைகள் போன்றவற்றை இவ்வலைத்தள பட்டியல் மென்பொருள் வாயிலாக தயாரிக்க இயலும் என்பதால் இது மனித வள மேலாண்மை தொடர்பான திட்டமிடலுக்கு உகந்த கருவியாக அமையும். இத்திட்டத்தை, படிப்படியாக

பிற துறைகளிலும் செயல்படுத்துவதற்கு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மின் ஓய்வூதியம் ( e-Pension)

**11.** இத்திட்டம், தற்போது சென்னையில் உள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், உட்பட அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்களும் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்கள் ஆகியவை மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் (ECS/RECS) அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகின்றன. இதன் மூலம் தங்களுடைய வங்கிக் கணக்குகளில் கணினி வாயிலாக வரவு வைக்கப்படும் ஓய்வூதியப் பயன்கள் குறித்து அனைத்து ஓய்வூதியதாரர்களும் எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

## ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering of Pensioners)

**12.** மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்திற் கொண்டு, ஓய்வூதியதாரர்களின் வருட நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக, ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகைப் பதிவு செய்யும் முறை, தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, 987 மின்னணு விரல் ரேகை பதிவுக் கருவிகள் மற்றும் 804 வலைத்தள புகைப்படக் கருவிகள் வாங்கப்பட்டு, சென்னை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திலும் அனைத்து மாவட்டக் கருவூலங்களிலும் பொருத்தப்பட்டு ஓய்வூதியதாரர்களின் விரல் ரேகையை 2014–2015க்கான ஆண்டு நேர்காணலின் போது பதிவு செய்ய ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஓய்வூதியச் சான்றிதழ்களை எண்மியமயமாக்கல் (Digitization)

**13.** தமிழ்நாடு மின்னணு கழகம் (ELCOT) மூலம் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள் ஆகியவற்றில் ஓய்வூதிய ஆவணங்களைக் எண்மியமயமாக்கும் முறை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென அரசு ரூ.1.26 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணி முடிவுற்றவுடன், மின்னணு பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய ஆவணங்கள், சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் உள்ள மின்னணு ஓய்வூதிய மென்பொருளுடன் இணைக்கப்படும். இது, சான்றிதழ்கள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்க வகைசெய்வதுடன், ஓய்வூதிய ஆவணங்களை ஒரே நேரத்தில் பலரும் பார்வையிடவும் பயன்படுத்தவும் உதவுகிறது.

**அரசின் பணப்பரிமாற்ற நடவடிக்கையில் மின்னணு முறை**

**14.** தமிழ்நாடு அரசு, மின்னணு முறையில் வரவுகளைப் பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதல் முறையை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, 100 சதவீத வரவின மற்றும் செலவின பணப்பரிமாற்ற நடவடிக்கைகளை மின்னணு முறையில் மேற்கொள்வதற்கான முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இம்மின்னணு முறையில் வரவுகளைப் பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதல் வணிகவரித் துறையிலும், போக்குவரத்துத் துறையிலும் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது, அரசுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும், இணையதள வாயிலாக தொகை செலுத்தும் முறையில், மின்னணு பதிவு மாற்றல் மூலம் செலுத்த வகை செய்கிறது. பதிவுத் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மற்ற இரண்டு வருவாய் வசூல் துறைகளைப் பொறுத்தமட்டில், மின்னணு முறையில் வரவுகளைப் பெறுகிற வசதிகளுக்காக தேசிய தகவல் மையம் உருவாக்கிய மென்பொருள் பயன்பாட்டுமுறை, சோதனை முறையில்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அரசின் அனைத்து பிறதுறைகளிலும் இணையதள வாயிலாகவோ (online) அல்லது கணினி வாயிலாகவோ (offline), 100 சதவீத மின்னணு முறையில் வரவுகளை பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதலுக்கு வகை செய்வதற்கு அனைத்து துறைகளுக்கும் உதவும் பொருட்டு, பொதுவான கருவூல வலைத்தளம் (Common Treasury Portal) ஒன்றை தொடங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், மின்–செலுத்துச்சீட்டு வழங்குவதன்மூலம் நேரடியாகத் தொகை செலுத்துவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட வங்கி கிளைகள் மூலம் தொகை செலுத்துவதற்கும், இவை உதவும். இவை மக்கள் பயனடையும் வகையில் மின்–ரசீதுகளையும், மின்–ஒப்புகைகளையும் வழங்க வழிவகுக்கும். இது தொடர்பாக, புதிய நடைமுறையை செயல்படுத்துவதற்கு மாநிலத்தில் முதற்கட்டமாக எட்டு துறைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை மூலமாக, படிப்படியாக, மின்னணு பணப்பரிமாற்ற நடவடிக்கைகள் வாயிலாக, வரிகள், கட்டணங்கள் மற்றும் ஏனைய

செலுத்துத் தொகை உட்பட அரசின் அனைத்து வரவினங்களையும் பதிவு செய்ய கருதப்பட்டுள்ளது.

**15.** தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மின்னணு முறையில் தொகை வழங்கல் நடைமுறையை ஏற்கனவே 100 சதவீதம் செயல்படுத்தியுள்ளது. ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கல், வாடகை தொகைகள் முதலியவற்றில் மின்னணு முறையில் தொகை வழங்கும் முறை ஓரளவுக்கு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. ஏனைய இனங்களில் காசோலை வாயிலாக தொகை வழங்கும் நடைமுறை தொடர்கிறது. அரசு வழங்குகின்ற தொகைகள் அனைத்தையும், உரிய நடவடிக்கைகள் வாயிலாக மின்னணு தொகை மாற்றல் முறைக்கு கொண்டுவர கருதப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் தொடரப்பட்டு, இறுதியில் அரசால் தொடங்கப்படவிருக்கின்ற ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும்.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IF&HRMS)

**16.** அரசின் மனிதவளம் (பணியாளர்கள்), நிதி ஆதாரங்கள் ஆகியவற்றை திறம்பட்ட முறையிலும் பயன்தருகிற வகையிலும் பயன்படுத்துவதற்காக, நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த அரசு கருதியுள்ளது. இதற்கான ஆலோசனைகளை வழங்கிடவும், திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்யும் பொருட்டும் சென்னை, திருவாளர்கள் அசென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற ஒரு ஆலோசனை முகமை நியமிக்கப்பட்டு திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

**17.** இத்திட்ட செயல்பாட்டினை மேற்பார்வையிட ஒரு இணை இயக்குநர், ஒரு முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு தனிக்குழுவை அமைக்க (மின் ஆளுமைக் குழு) அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு தனிக்குழு

அமைக்கப்பட்டு அக்குழுவால் இத்திட்டம் குறித்த செயல்பாடுகளின் முன்னேற்றம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனை முகமை, தனிக்குழுவின் வழிகாட்டுதல் பேரில், விவர அட்டவணையின்படி **“தற்போதைய நடைமுறைகள்”** **(As-Is)** மற்றும் **“நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகள்”** **(To-Be)** குறித்த அறிக்கைகளை அளித்துள்ளது. திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்வதற்கான பணி நடந்தேறி வருகிறது.

**18.** இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், மாநிலம் முழுவதும் உள்ள 20,000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடியாக இணையத்தின் மூலம் பட்டியல்களை கருவூலத்தில் அளிக்க இயலும். இத்திட்டத்தில் பொதுவான பணம் செலுத்தும் சேவை (Common Payment Gate Way) முறையை பயன்படுத்துவதன் காரணமாக உடனடியாக வசூல் செய்யப்பட்டு வருவாய் கணக்கீடு செய்யப்படுவதால் அரசு பயன்பெற இயலும். மேலும் இதன்மூலம்

பொதுமக்களும் தடைகளற்ற உடனடி சேவைகளைப் பெற்று பயன்பெற இயலும்.

**19.** இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் **9** இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு கணினிமயமாக்கப்பட்டு அவர்களது சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, பணி மாறுதல்கள், விடுப்பு மற்றும் ஏனைய விவரங்கள் அவ்வப்போது நிகழ்நேர அடிப்படையில் பதிவு செய்யப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம், எண்ணியல் ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல்ரேகைப் பதிவுமுறை (Bio Metric) போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிகழ்நேர நிதி நிலை அரசுக்கு தெரிய வருவதால், மாநில அரசின் வலுவான நிதி மற்றும் மனிதவள மேலாண்மைக்கு வகைசெய்யும்.

**20.** இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, ஆலோசனை முகமை தயாரித்து அளித்த விரிவான

திட்ட அறிக்கையின்படி ரூ.167.45 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக, திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்வதற்காக, ஆலோசனை முகமையால் தயாரித்து அளிக்கப்பட்ட செயற்குறிப்புக்கு (Request for proposal) அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திட்ட ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், திட்டச் செயலாக்கம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும்.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2012

21. 01.07.2012 முதல் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்–2012, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசுத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டபூர்வ அமைப்புகள், மாநில பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 12 இலட்சம் பணியாளர்கள் மற்றும் அவர்களது தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**22. 1–7–2012**ஆம் நாள் முதற்கொண்டு, இத்திட்டத்தில் மருத்துவக் காப்பீட்டு உதவித் தொகையானது, ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் நான்கு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.**150/–** வீதம் சந்தாத் தொகை சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு ஒரு நபருக்கு ரூ.**2,090/–** (சேவை வரி ரூ.**290/–** உள்பட) ஆண்டு சந்தாத் தொகையாக காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது. **113** வகையான மருத்துவ அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு இத்திட்டத்தின் கீழ் **635** மருத்துவமனைகள் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக இணைக்கப்பட்டுள்ளன.

**23.** இப்புதிய திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது **01.07.2012** முதல் **30.06.2014** வரை **90,691** பயனாளிகள், **368.53** கோடி ரூபாய்

மதிப்பிலான மருத்துவ உதவியை பெற்றுள்ளனர். இது தொடர்பான விவரம் பின்வருமாறு:

| தொடர் எண் | ஆண்டு | பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை | தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| (i) | 2012–2013 (ஜூலை–ஜூன்) | 39307 | 168.36 |
| (ii) | 2013–2014 (30.06.2014 வரை) | 51384 | 200.17 |
| | **மொத்தம்** | **90691** | **368.53** |

## புதிய சார் கருவூலங்கள் தோற்றுவித்தல்

**24.** "ஒரு வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம்" என்கிற அரசின் கொள்கைக்கேற்ப, **9** புதிய சார் கருவூலங்கள் தோற்றுவிப்பதற்கு அரசால் **2013–2014**ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழகத்தில் தற்போது வட்ட தலைமையிடங்களில்

செயல்படும் 215 சார் கருவூலங்கள் உட்பட மொத்தம் 229 சார் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன.

## கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்

**25.** அரசாணை (நிலை) எண்.403, நிதி (க.க.–3)த் துறை, நாள்.05.11.2012இன்படி, தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் 69 சார் கருவூலங்களில் 14 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு சார் கருவூலகத்திற்கு ரூ.55.00 இலட்சம் என்ற வீதத்தில் மொத்தம் ரூ.7.70 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை மற்றும் தரங்கம்பாடி ஆகிய மூன்று சார் கருவூலங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**26.** ஒவ்வொரு சார் கருவூலத்திற்கும் ரூ.60.05 இலட்சம் என்ற வீதத்தில் 33 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு 2013ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிருவாக ஒப்புதல் அளித்தது.

மொத்தமுள்ள 33 சார் கருவூலங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரி, சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி மற்றும் கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில் ஆகியவற்றிலுள்ள 3 சார் கருவூலங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் சிவகிரி சார் கருவூல கட்டுமானப் பணி முடியும் தருவாயிலும் மற்ற இரு இடங்களில் கட்டுமான பணி தொடங்கிய நிலையிலும் உள்ளன.

## ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

**27.** நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள கருவூலக் கணக்கு இயக்குநரகம், சென்னை மண்டல கருவூலக் கணக்கு இணை இயக்குநர் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையிலுள்ள மாவட்டக் கருவூலம், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், உதவி கண்காணிப்பாளர் முத்திரைத்தாள் அலுவலகம், ஓய்வூதிய இயக்ககம், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகம், முதன்மை அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை அலுவலகம் மற்றும் கூட்டுறவு

தணிக்கைத் துறை இயக்குநரகம் ஆகிய 10 அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு ரூ.21.60 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டதுடன், கட்டுமானப் பணியை தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**28.** மாநிலத்திலுள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டப்பூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களின், அவற்றிற்குரிய சட்ட விதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**29.** தற்போது பின்வரும் நிறுவனங்கள், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| **தொடர் எண்** | **நிறுவனங்கள்** | **மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | மாநகராட்சிகள் | 12 |
| (ii) | நகராட்சிகள் | 124 |
| (iii) | பேரூராட்சிகள் | 528 |
| (iv) | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| (v) | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| (vi) | பல்கலைக் கழகங்கள் | 21 |
| (vii) | உள்ளூர் நூலக அதிகாரமன்றங்கள் | 32 |
| (viii) | மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுக்கள் | 21 |
| (ix) | தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் | 1 |
| (x) | வேளாண்மை பொறியியல் பிரிவுகள் | 2 |
| (xi) | கோயம்பேடு விற்பனைக் குழு | 1 |
| (xii) | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 26 |
| (xiii) | கிராம ஊராட்சிகள்( சோதனைத் தணிக்கை மட்டும்) | 2506 |
| (xiv) | ஏனைய நிறுவனங்கள் | 9 |

**உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை**

**30.** உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் வரி வரவுகள், வழங்கப்படும் அரசு அல்லது ஏனைய அமைப்புகளின் நிதியுதவி ஆகியவற்றை பாதுகாத்து, அந்த தொகை எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு செலவிடப்படுகிறது என்பதை உறுதி செய்வதே உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் நோக்கமாகும்.

**31.** உள்ளாட்சி நிதித் தணிக்கை, உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி வருமானம் மற்றும் செலவினம் குறித்த தனியுரிமை தணிக்கை (Proprietary Audit) மேற்கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் உண்மை நிலையை கணக்குகள் பிரதிபலிப்பதை உறுதி செய்யவேண்டும்.

**கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கை**

**32.** கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், துறை வாயிலான வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் **20** சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் **2506** ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன்நிகழ் தணிக்கை (Concurrent Audit)**

**33.** தற்போது **12** மாநகராட்சிகளிலும், **10** நகராட்சிகளிலும் மற்றும் **14** பல்கலைக் கழகங்களிலும்

இத்துறையின் தணிக்கைக் குழுக்களால் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2000–2001** –ஆம் ஆண்டு முதல் அனைத்து **385** ஊராட்சி ஒன்றியங்களிலும் உடன்நிகழ் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவுசெய்யப்பட்ட **116** ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாக கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

**மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறை அமுல்படுத்துதல்**

**34.** உடன்நிகழ் தணிக்கைப் பிரிவுகள் செயல்படுகின்ற **12** மாநகராட்சிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட **10** நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு

தொகை வழங்கப்பட்டவுடன், செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

**35.** உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதிசெய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்துப் பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால்

ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

**உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை**

**36.** உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 114 நகராட்சிகள், 7 பல்கலைக் கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலகக் குழுமங்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டு கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கை**

**37.** உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூர் தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை

இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு **2012–2013** வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புர உள்ளாட்சி நிறுவனங்களில் வழக்கமாக சேரும் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

**38.** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வழக்கமாக சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual Based Accounting System) **1999–2000** மற்றும் **2000–2001** ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. **2002–2003** ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**39.** ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புர உள்ளாட்சி

அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலைக் குறிப்பினையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி கணக்குகளை தயாரித்து பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

**40.** இந்த நடைமுறையினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் உடமைகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். இந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், அவற்றின் மூலதன திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத் திட்டங்களுக்கு நிதி திரட்டும் திறன் விரிவடைந்துள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்கு தணிக்கைச் சான்று வழங்குதல்**

**41.** உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கை சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் அரசாணை (நிலை) எண்.93, நிதி (நி.கு.IV) த் துறை, நாள் 28.03.2003 இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

**42.** கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள "தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மை, நீரமைப்பு மீட்புப் பணி மற்றும் மேலாண்மைத் திட்டத்திற்கும்" (IAMWARM) இத்துறையினால் தணிக்கைச் சான்று அளிக்கப்படுகிறது.

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

**43.** தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக்கையாடல், பொதுப் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள் மாதாந்திர காலமுறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள் மூலம் தேவையான தொடர் நடவடிக்கைக்காக அரசுக்கும், நிருவாகத் துறைத் தலைமைக்கும் தெரிவிக்கப்படுகிறது.

**44.** வழக்கமாக தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, நியாயமான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்ட அமர்வின் மூலமாகவும் இத்துறையின்

மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

**45.** தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது. அரசாணை (நிலை) எண்.83, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **01.06.2009**–ல் இது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்களை அரசு வழங்கியுள்ளது.

**மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்**

**46.** ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. **2013**–ஆம் ஆண்டு மற்றும் **2014**ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை மாவட்ட

அளவிலான 95 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1424 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

47. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்களை அமைக்க அரசாணை (நிலை) எண்.1, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூராட்சிகள்–2) துறை, நாள் 04.01.2007–ல் ஆணையிடப்பட்டுள்ளது. 2013–ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை மாவட்ட அளவிலான 29 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 3416 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

48. அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகரை தலைவராகக்

கொண்டும், மாநில அளவிலான உயர்மட்டக் குழு நகராட்சி நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண்.65, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.5.2007ன் படி அமைக்கப்பட்டுள்ளது. 2013–ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை மாவட்ட அளவிலான 12 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1136 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**நிருவாகத்துறையும் மற்றும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்**

**49.** கணக்குகள் மற்றும் தணிக்கைத் தொடர்பான பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே தீர்வுகாண ஏதுவாக நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக ஊராட்சி அமைப்புகள் தொடர்பான நிருவாக மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம் மாவட்ட/மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. இவ்வாறே இறுதி நிலை விவாதம் மற்றும் தணிக்கை அறிக்கை ஒப்புதல்

ஆகியவற்றின்போது தொடர்புடைய அமைப்புகளின் செயல்நிலை அலுவலர்களோடு நிருவாகத்தின் உயர்நிலை அலுவலர்களும் பங்கு பெறுகின்றனர். இதனால் தணிக்கையின் போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளை உடனுக்குடன் சரி செய்து கொள்ள ஏதுவாகிறது.

**மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் அளித்தல்**

**50.** பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநில / மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்களை பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்கள், இத்துறையால் வழங்கப்படுகின்றன. இதனால், திட்டப்பணிகள் முடிவடைந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களால் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

**சிறப்புப் பணிகள்**

**51.** வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர, கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **31.07.2014** அன்றைய நிலவரப்படி மொத்தம் **34,282** ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரத்தால் பராமரிக்கப்படும் சம்மந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு விடுவிக்கப்படுகிறது.

**(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்**

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளை களைவதற்கு தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தை திறம்பட, உரிய நேரத்தில் வழங்க ஏதுவாக மின்னணு முறையில் பட்டுவாடா செய்வதற்கான மென்பொருளை உருவாக்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்**

அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஆகியன அரசாணை (நிலை) எண்.120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

துறை, நாள்.25.05.1999–ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 2013–2014ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூலை மாதம் வரை கீழ்க்கண்டபடி கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் பின்வருமாறு.

| நலத் திட்டம் | | குடும்ப பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|
| கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 654 | 168.46 | 597 | 193.44 |

**(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்**

அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் ஓய்வூதிய நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஆகியன, அரசாணை (நிலை) எண்.23,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை, நாள் 15.03.2013–இல் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**(v) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967ம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.12 கோடி அளவிலான தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**(vi) அறக்கட்டளைகளின் நிருவாகம்**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், **01.04.1952** அன்றிலிருந்து அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அரசு, அறக்கட்டளைகளை ஏற்று, ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை வெளியிடுகிறது.

**(vii)** இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் **12.58** இலட்சம் ரூபாய் மதிப்புள்ள **4** மத்திய அரசு அறக்கட்டளைகளும், **20.13** கோடி ரூபாய் மதிப்புள்ள **874** மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. **2013–2014**ஆம் ஆண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூலை மாதம் வரை அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக **360** அறக்கட்டளைகளுக்கு **8.47** இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

**52.** அரசு உத்தரவுகளின்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையையும் அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படுவதையும் சரிபார்ப்பதற்காக ஒரு சிறப்புக் குழு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குனரால் ஏற்படுத்தப்பட்டது. **01–04–2003** முதல் **31–03–2013** வரையிலான பத்து ஆண்டுகளுக்கான மேற்காணும் விவரங்கள் அரசு நிர்ணயம் செய்த குறிப்பிட்ட காலத்திற்குள் திரட்டப்பட்டுள்ளது.

**53.** மேற்படியான காலங்களில் **125** நகராட்சிகள், **385** ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் **529** பேரூராட்சி பணியாளர்களின் பங்களிப்பான ரூ.**36,81,26,196/–** மற்றும் நிருவாகத்தினால் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட நிருவாகப் பங்குத் தொகையான ரூ.**13,04,79,781/–**ஐ உள்ளடக்கிய ரூ.**49,86,05,977/–**க்கான தொகை உரிய அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**நிருவாக சீர்திருத்தம்**

**54.** இத்துறையின் நிருவாக திறனை வலுப்படுத்துவதற்கும் மற்றும் தணிக்கைத் திறனை மேம்படுத்துவதற்கும் கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) அரசாணை (நிலை) எண். 426, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள். **11–11–2013** இன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் நிருவாகத்தினை புனரமைத்தல் / வலுப்படுத்துதல் தொடர்பாக உயர்நிலைக்குழு ஒன்று கீழ்க்கண்ட நோக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கை துறை ஆகியவற்றின் பணியாளர்களின் எண்ணிக்கை, தேர்வு செய்யும் முறை மற்றும் நிருவாக அமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தல்.
- ❖ மனிதவள பற்றாக்குறையை கண்டறிதல் மற்றும் மனிதவள திறனை மேம்படுத்த ஆலோசனை வழங்குதல்.

- ❖ தற்போது தணிக்கை நடைமுறையிலுள்ள குறைபாடுகளை கண்டறிந்து தணிக்கை முறை / தரத்தினை மேம்படுத்த விரிவான ஆய்வு செய்தல்.
- ❖ செயலாக்கத் தணிக்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான சாத்திய கூறுகளை ஆய்வு செய்தல்.

இக்குழுவின் அறிக்கை விரைவில் பெறப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) அரசாணை (நிலை) எண் 188, நிதி (உ.நி)த் துறை, நாள் 06.06.2013 இல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலுள்ள ஆறு மண்டல துணை இயக்குநர் பணியிடங்களை இணை இயக்குநர் பணியிடங்களாக உயர்த்தியதுடன் அவ்வலுவலகங்களையும் இணை இயக்குநர் அலுவலகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

(iii) ஒவ்வொரு மண்டல இணை இயக்குநரின் நிருவாக புவிப்பரப்பைக் கணக்கில் கொண்டு அனைத்து ஆறு மண்டல இணை இயக்குநர்களுக்கு ஓட்டுநர்

பணியிடத்துடன் கூடிய வாகனங்கள் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

(iv) தணிக்கைக்காக, இத்துறையின் தணிக்கையாளர்கள் பயன்படுத்தும் தணிக்கை நடைமுறை நூல்களை நாளதுவரையிலாக்குதலையும், நாளதுவரையிலான நடைமுறைகள், சட்டம் மற்றும் விதிகள் ஆகியவை குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு நகர்பகுதி உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்காக தனியாக நடைமுறை நூல்களையும், பயிற்சி நடைமுறை நூல்களையும் தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது.

**தணிக்கை நிலை**

**55.** இத்துறையின் தணிக்கைக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களின் தணிக்கை **2011–2012**ஆம் நிதியாண்டுவரை முடிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் **2012–2013** மற்றும்

2013–2014ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை 31–08–2014லிலும், 2012–2013ஆம் ஆண்டிற்கான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை 31.10.2014லிலும் முடிக்கப்படும்.

**தணிக்கைக் கட்டணம்**

**56.** பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2013–2014–ம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூன் மாதம் வரை 9.52 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு தணிக்கைத் துறை

**57.** கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தணிக்கை மேற்கொள்ள சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கூட்டுறவுத் துறையில் ஒரு பிரிவாக செயல்பட்டு வந்த தணிக்கைப் பணியினை தனியாகப் பிரித்து, கூட்டுறவு தணிக்கைத் துறை என்ற புதிய துறை 17.06.1981 முதல் தோற்றுவிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80–வது பிரிவின்படி, பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை இத்துறை மேற்கொள்ள வேண்டும்.

**58.** கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்.

<table>
<tr><th>தொடர் எண்.</th><th>நிருவாகப் பதிவாளரின் பெயர்</th><th>கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை</th></tr>
<tr><td>(i)</td><td>கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்</td><td>10,449</td></tr>
<tr><td>(ii)</td><td>கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர்</td><td>1,409</td></tr>
<tr><td>(iii)</td><td>தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்</td><td>345</td></tr>
<tr><td>(iv)</td><td>தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்.</td><td rowspan="2">1,378</td></tr>
<tr><td>(v)</td><td>தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்</td></tr>
<tr><td>(vi)</td><td>கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)</td><td>885</td></tr>
<tr><td>(vii)</td><td>மீன் வளத் துறை இயக்குநர்</td><td>1,300</td></tr>
<tr><td>(viii)</td><td>கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ பணிகள் இயக்குநர்</td><td>242</td></tr>
<tr><td>(ix)</td><td>சர்க்கரைத் துறை ஆணையர்</td><td>17</td></tr>
<tr><td>(x)</td><td>வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)</td><td>143</td></tr>
</table>

| தொடர் எண். | நிருவாகப் பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (xi) | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | **198** |
| (xii) | பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | **25** |
| (xiii) | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை இயக்குநர் | **120** |
| (xiv) | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் | **43** |
| | **மொத்தம்** | **16,554** |

## கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

**59.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா

என்பதை உறுதிப்படுத்துதல் போன்றவை கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதைக் கண்காணிக்க சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை முக்கிய கருவியாக உள்ளது. அரசின் நிதியுதவி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

**60.** முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், **2009**ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய மைய வங்கியின் பரிந்துரையின்படி ரூபாய் **25** கோடிக்கு மேல் வைப்பீட்டு தொகைகளை

கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகள், பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சட்ட பூர்வத் தணிக்கை

**61.** சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை **45** நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. **2013–2014**ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக **3.30** கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படைவிதி

127–ன் கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127–ன்கீழ், 2013–2014ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட பணியாளர்களின் செலவினத் தொகையாக 10.20 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு அறிக்கைகள்

**62.** தணிக்கையின் போது, கடுங்குறைகள் கண்டறியப்படுமாயின் அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. 2013–2014–ம் ஆண்டில் **41.57** கோடி ரூபாய் தொடர்புடைய 242 சிறப்பு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

## 2013–2014ஆம் ஆண்டு மீட்டுயிர்ப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டமைப்பு திட்டத்தின்கீழ், முதன்மை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சிறப்புத் தணிக்கை

**63.** மத்திய அரசு, நெசவுத் துறைக்கான மீட்டுயிர்ப்பு, மறு சீரமைப்பு மற்றும் மறு கட்டமைப்பு தொகுப்பு திட்டத்தினை நபார்டு வங்கியின் மூலம் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான தொகுப்பு நிதியுதவியை இறுதி செய்யும்பொருட்டு நபார்டு வங்கியால் அளிக்கப்பட்ட சிறப்புத் தணிக்கை நடைமுறை நூலின்படி, தமிழ் நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மாநில அளவிலும், 1099 முதன்மை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட அளவிலும், சிறப்பு தணிக்கை மேற்கொள்ள கூட்டுறவு தணிக்கை இயக்குநரை நபார்டு வங்கி கேட்டுக்கொண்டது.

**64.** இந்த சிறப்புத் தணிக்கையை கூட்டுறவு தணிக்கைத் துறை மேற்கொண்டதால், மேற்கண்ட திட்டத்தின் நிதி தொகுப்பிலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு மானியமாக 141.50 கோடி ரூபாய் பெற வகைசெய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி, இதற்கான தணிக்கை கட்டணமாக 23.40 இலட்சம் ரூபாய் அரசுக்கு கிடைத்துள்ளது.

## தணிக்கையின் தரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி

**65.** தணிக்கையாளர்களிடையே, திறமையையும், தணிக்கையின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக, பல்வேறு வகையான பயிற்சித் திட்டங்களை நடத்துவதுடன், பல்வேறுவகை கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை செய்யும் போது பின்பற்றக்கூடிய விதிகள், அடிப்படைக் கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய புத்தாக்கப் பயிற்சிகள் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகின்றன. 2013–2014–ஆம் ஆண்டில் 8 பல்வேறு பயிற்சியின் மூலமாக 195 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## சிறு சேமிப்புத் துறை

**66.** மத்திய அரசின் நிதித் துறையினால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 01.12.2011 முதல் மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் 50 சதவீதம் அந்தந்த மாநிலத்திற்கே 9.5 சதவீதம் வட்டி வீதத்தில் நீண்டகால கடனாக மத்திய

அரசால் வழங்கப்படுகிறது. இச்சிறுசேமிப்புத் திட்டங்கள் பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிக வருவாய் தரும் முதலீட்டினை ஏற்படுத்துவதுடன், மாநில வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியினை திரட்டுவதற்கும் வழிவகை செய்கிறது.

## சிறு சேமிப்புத் திட்டங்கள்

**67.** சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கு தேவைக்கேற்ற வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. **1.04.2014** முதல் மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2012 முதலான வட்டி சதவீதம் | 01.04.2013 முதலான வட்டி சதவீதம் | 01.04.2014 முதலான வட்டி சதவீதம் |
|---|---|---|---|---|
| (i) | அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA) | 4.0 | 4.0 | 4.0 |
| (ii) | **கால வைப்பீடு** | | | |
| | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.2 | 8.2 | 8.4 |

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2012 முதலான வட்டி சதவீதம் | 01.04.2013 முதலான வட்டி சதவீதம் | 01.04.2014 முதலான வட்டி சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.3 | 8.2 | 8.4 |
| | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.4 | 8.3 | 8.4 |
| | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.5 | 8.4 | 8.5 |
| (iii) | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) | 8.4 | 8.3 | 8.4 |
| (iv) | 5 ஆண்டு மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) | 9.3 | 9.2 | 9.2 |
| (v) | அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS) | 8.5 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை) | 8.4 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை) | 8.4 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை) |
| (vi) | தேசிய சேமிப்புப் பத்திரம் NSC- VIIIவது வெளியீடு | 8.6 (5 வருடங்கள்) | 8.5 (5 வருடங்கள்) | 8.5 (5 வருடங்கள்) |
| (vii) | 10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் NSC-IXவது வெளியீடு | 8.9 | 8.8 | 8.8 |

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2012 முதலான வட்டி சதவீதம் | 01.04.2013 முதலான வட்டி சதவீதம் | 01.04.2014 முதலான வட்டி சதவீதம் |
|---|---|---|---|---|
| (viii) | 15 ஆண்டு பொது சேமநல நிதித் திட்டம் (PPF) | 8.8 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) | 8.7 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) | 8.7 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) |

**சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்**

**68.** கடந்த ஒன்பது வருடங்களாக சிறுசேமிப்பில் தமிழகத்தில் திரட்டப்பட்ட வசூல் விவரங்கள் கீழ்கண்டவாறு :—

**(ரூபாய் கோடியில்)**

| தொடர் எண் | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| (i) | **2005—2006** | **5000.00** | **12455.75** | **5594.13** |
| (ii) | **2006—2007** | **5700.00** | **10158.54** | **2637.25** |
| (iii) | **2007—2008*** | **——** | **7791.11** | **—965.98** |
| (iv) | **2008—2009** | **——** | **8486.64** | **—1216.73** |
| (v) | **2009—2010** | **——** | **12113.39** | **1539.39** |

| தொடர் எண் | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| (vi) | **2010–2011** | **––** | **13414.56** | **516.32** |
| (vii) | **2011–2012** | **––** | **10607.50** | **–2100.74** |
| (viii) | **2012–2013** | **––** | **9797.05** | **–1506.83** |
| (ix) | **2013–2014** | **––** | **9624.19** | **–730.78** |

* **2007–2008** முதல் சிறுசேமிப்பு வசூலுக்கு தமிழக அரசு இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.

## முகவர்களுக்கான தரகுத் தொகை மற்றும் ஊக்கத்தொகை

**69.** சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுதற்கு மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் **30,804** முகவர்கள் பணிபுரிகிறார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு **1.12.2011** முதல் தரகுத் தொகை விகிதங்களை மாற்றி அமைத்துள்ளது.

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சேமிப்புத் திட்டங்கள் | முகவர்களின் எண்ணிக்கை | மத்திய அரசின் தரகுத் தொகை (30.11.11 வரை) | மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட தரகுத் தொகை (1.12.11 முதல்) | மாநில அரசின் ஊக்கத் தொகை (31.3.2012 வரை) |
|---|---|---|---|---|---|---|
| அ | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம்/ தேசிய சேமிப்பு பத்திரம்/ அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1,2,3,5 வருடங்கள்) | 7378 | 1% | 0.5% | 0.5% |
| ஆ | மகளிர் முகவர் திட்டம் | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 22881 | 4% | 4% | 2% |
| இ | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 545 | 1% | இல்லை | இல்லை |
| ஈ | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | - | 0.5% | இல்லை | இல்லை |
| | மொத்தம் | | 30804 | | | |

**70.** **01.12.2011** முதல் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு மத்திய அரசு சில வரையறைகள் நிர்ணயித்திருந்தாலும், **31.03.2012** வரை ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த ஊக்கத் தொகையினை எவ்வித மாற்றமுமின்றி வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

## விழிப்புணர்வு முகாம்

**71.** பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அதிநவீன முறையில் சிறுசேமிப்பு விளம்பரங்களுடன் கூடிய குறும்படங்கள் அனைத்து மாவட்டங்களிலும் திரையிடப்படுகின்றன. பொது மக்கள் தானாக முன்வந்து சிறுசேமிப்பில் பங்கு பெற்று பயன் அடையும் வகையில் சாத்தியமான அனைத்து வழிகளின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**72.** நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும் மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செயலாக்க உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பாக வரவு செலவைத் திட்டமிடும் நோக்குடனும் **1971**ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவர தொகுப்பு மையம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மின்னணு தகவல் செயலாக்க உபகரணங்களை பயன்படுத்தி அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை

தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் **1972**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக **1975**ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) அரசு தேர்வு இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்.

(ii) ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி.

(iii) ஆசிரியர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.

(iv) தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்புநிதி.

**தேர்வுப் பணிகள்**

**73.** அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் அரசாணை (1ப) எண் 324,

பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.10.2010—ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**74.** அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பலதரப்பட்ட தேர்வுகளின் முடிவுகளை தொகுக்கும் பணியினை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வியாண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகள் விவரம் பின்வருமாறு:—

| **தேர்வுப் பணிகள்** | **மார்ச் 2013** | **சிறப்பு துணைத் தேர்வு 2013** | **அக்டோபர் 2013** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளி தேர்வு | **8,54,105** | **83,494** | **41,445** | **9,79,044** |
| பத்தாம் வகுப்பு தேர்வு | **11,19,478** | **92,748** | **48,010** | **12,60,236** |
| எட்டாம் வகுப்பு தேர்வு | **13,747** | | | **13,747** |
| ஊரக திறனாய்வுத் தேர்வு | **41,048** | | | **41,048** |
| ஆசிரியர் கல்வி பட்டய படிப்பு தேர்வு | **66,383** | | | **66,383** |
| தேசிய வழி மற்றும் | **60,346** | | | **60,346** |

| தேர்வுப் பணிகள் | மார்ச் 2013 | சிறப்பு துணைத் தேர்வு 2013 | அக்டோபர் 2013 | மொத்தம் |
|---|---|---|---|---|
| திறன்படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு | | | | |
| தொழில்நுட்பத் தேர்வு | 15,983 | | | 15,983 |
| மொத்தம் | 21,71,090 | 1,76,242 | 89,455 | 24,36,787 |

**முகப்புத்தாள்கள்**

**75.** உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத்தாள்களை அச்சிடும் பணி அரசாணை (நிலை) எண்.4, பள்ளிக் கல்வித் துறை, நாள்.10.01.2014இன் மூலம் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மார்ச்/ஏப்ரல் 2014 உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான 1.60 கோடி முகப்புத்தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக 79,21,780 ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

**76.** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / நகராட்சி பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள்/ கல்லூரிகள் / அரசு நிதியுதவி பெறும் தொழிற்கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குத்தாள்களை கணினி வழி தொகுக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**77. 2007–2008**ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக் கணக்குத் தாள்கள் வழங்க அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **2013–2014**ஆம் ஆண்டு வரையிலான கணக்குத்தாள்கள் வழங்கும் பணி அரசுத் துறை நிறுவனத் தணிக்கை துறையின் மூலம் நடைபெற்று வருகின்றது.

**பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்**

**78.** கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புதிய குறியீட்டு எண்கள் வழங்கி, அதன் கணக்குகளை பராமரிக்கும் பணிகளையும் அரசு இந்நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

(i) ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்.

(ii) அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள்.

(iii) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்.

(iv) மாநகராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்கள்.

(v) பேரூராட்சிகளில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.

(vi) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.

**79.** அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், இதுவரையில் **1,04,686** பணியாளர்களுக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புதிய குறியீட்டு எண்களை வழங்கியுள்ளது.

**80.** பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு **2009–2010** முதல் **2012–2013** வரையிலான கணக்குகள் கணினியில் தொகுக்கப்பட்டு, கணக்குத்தாள்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. உள்ளாட்சித் துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அத்துறையின் பங்குகளையும் சேர்த்து, தணிக்கை முடிக்கப்பட்டபின் கணக்குத்தாள்கள் வழங்கப்படும்.

**81.** தமிழ்நாடு மாநில கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத் துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகள் **2013–2014**ஆம் ஆண்டு முதல் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தற்போது **2,42,143** சந்தாதாரர்கள் உள்ளனர்.

**தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி**

**82.** இத்துறைக்கு தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட

பணியாளர்களின் பொது வைப்பு நிதி பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தற்போது **2,04,914** சந்தாதாரர்கள் உள்ளனர்.

**83.** புதிய கணக்கு எண்கள் கோரி விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக தேசிய தகவல் மைய உதவியுடன் பெறப்பட்டு வருகிறது. இதுவரை **1,82,843** விண்ணப்பங்களுக்கான தகவல் பதியும் பணிகள் முடிவடைந்துள்ளன. அவற்றுள் **94,704** சந்தாதாரர்களின் புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலரால் சரிபார்க்கப்பட்டுள்ளன.

## அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை

**84.** அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத்துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன் பல்வேறு சட்டபூர்வ வாரியங்கள் மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும்

நிறுவனங்களின் தணிக்கை அரசுத்துறை நிறுவனத்தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சட்டபூர்வ நிறுவனங்களின் தணிக்கை**

| தொடர் எண். | நிறுவனத்தின் பெயர். | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம். | 2012–2013 |
| (ii) | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 2012–2013 |
| (iii) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2012–2013 |
| (iv) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். | 2012–2013 |
| (v) | தமிழ்நாடு வக்ஃபு வாரியம். | 2012–2013 |
| (vi) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 2012–2013 |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகிறது.

**சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை**

**85.** கீழக்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| **தொடர் எண்** | **நிறுவனத்தின் பெயர்.** | **எண்ணிக்கை / நிறுவனங்கள்** |
|---|---|---|
| (i) | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம். | **94,605** |
| (ii) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | **874** |
| (iii) | எடையளவு நிறுவனங்கள் | **313** |
| (iv) | ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள் | **673** |

இத்துடன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியம், நாட்டுப்புற கலைஞர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும்

ஏனைய **16** நல வாரியங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைச் சான்று**

**86.** மானிய உதவி பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கை சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

**இதர பணிகள்**

**87.** அரசின் குறிப்பான ஆணையின்படி **14** அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**88.** மேலும், கீழ்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

(i) நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகள் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அயல்நாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் **2010–**இன்கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விதிமீறல்களை கண்டறியும் வகையில் சிறப்பு தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும்

ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்குகளை சரிபார்த்து சான்றளித்தல்.

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

**89.** தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அந்தந்த துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் திருத்த நடவடிக்கைக்காக மாதந்தோறும் தொகுத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**தணிக்கை கட்டணம்**

**90.** சட்டப்பூர்வ வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கை பணியாளர்களின் சம்பளச் செலவினம் அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் **1.5** சதவீதமும் தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்**

**நிதி (ம) பொதுப்பணிகள் துறை அமைச்சர்**